# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண் : 124 / சென்னை [அங்கீகரிக்கப்பட்டது]

நாள் : 04.02.2011
வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 5.10 மணி

## நுழைவாயிற் கூட்டம்

இடம் : அனைத்து மேற்பார்வை
பொறியாளர் அலுவலகம் முன்பாக..

### கோரிக்கைகள் :

★ மின்வாரிய பணியாளர்களின் ஓய்வூதியத்தை பாதுகாத்திட ஓய்வூதிய நிதியம் உருவாக்கப்படுவதை முத்தரப்பு ஒப்பந்தத்தில் உறுதி செய்திட,

★ மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் 03.10.2009 அன்று மாநில மாநாட்டில் கோரிக்கைகளை ஏற்று அறிவித்த அறிவிப்புகளை உடனே நிறைவேற்றிட,

★ அனைத்து பணியாளர்களுக்கும் காலவரைக்குட்பட்ட (Time Bound) பதவி உயர்வுகள் வழங்கிட,

★ பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்ச நடவடிக்கையினால் தாமதப்படுத்தப்பட்டுவரும் பட்டய பொறியாளர்களின் அனைத்து பதவி உயர்வுகளையும் முழுமையாக உடனே வழங்கிட,

★ Non Work Load பகுதிகளில் கட்டாயத்தின் அடிப்படையில் பணி அனுமதிகள் (Post Sanction) ரத்து செய்யப்பட்டும், மாற்றி அனுமதித்தும் (Redepolyment) உள்ள அனைத்து இடங்களுக்கும் மீண்டும் பணி அனுமதிகளை உடனே வழங்கிட, புதிய மின் திட்டங்களுக்கு முழுமையாக வாரிய பணியிடங்கள் அனுமதி வழங்கிட,

## தமிழக அரசையும், மின்வாரியத்தையும் வலியுறுத்தி

# மாபெரும் நுழைவாயிற் கூட்டம்

பொறியாளர்களே அணி திரள்வோம்! வெற்றி காண்போம்!!

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/சென்னை (அங்கீகரிக்கப்பட்டது)

## நுழைவாயிற்கூட்டம்

**நாள் : 04.02.2011**
**நேரம் : மாலை 05.10 மணி**

**இடம் : அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக**

அன்பார்ந்த பொறியாளர்களே,

வணக்கம். 53 ஆண்டுகால தமிழ்நாடு மின்சார வாரியம் அரசாணை எண். 100 நாள்19.10.2010 -ன் படி மூன்று கம்பனிகளாக 01.11.2010 முதல் பிரிக்கப்பட்டுவிட்டது. வாரியப் பணியாளர்களின் ஒரே நம்பிக்கை, எதிர்கால வாழ்வின் உத்திரவாதம் - "**ஓய்வூதியம்**".

ஓய்வூதியம் மற்றும் பணியிறுதி சலுகைகள் போன்றவற்றிற்கு "நிபந்தனையில்லா உத்திரவாதம்" (Unconditional guarantee) அளித்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிடும் தமிழக அரசு உறுதியளித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உறுதி மொழி மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் வாரியத்தின் தொடரும் நிதிஇழப்பினால் இது மாறுதல் காலத்திற்கு பின்னும் (after transition period) தொடர இயலுமா என அச்சம் ஏற்படுகிறது.

வாரிய நிதிநிலையில் மாதந்தோறும் சுமார் ரூ.1600 கோடிக்கு நஷ்டம், 2010-11-ம் ஆண்டு இறுதியில் வாரிய மொத்த நிதிஇழப்பு ரூ.33,000 கோடியை தாண்டும் என்ற எதிர்பார்ப்பு. இவை வாரியப்பணியாளர்களின் ஓய்வூதியத்தைப் பற்றிய உத்திரவாதத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.

82937 ஓய்வூதியதாரர்கள், 76465 வாரியப் பணியாளர்களின் ஓய்வூதியத்தை உறுதி செய்யவேண்டிய அவசியம், கடமை வாரியத்திற்கும், அரசுக்கும் உள்ளது. அரசு அளித்துள்ள உத்திரவாதத்தை செயல்படுத்திட உரிய வழிமுறை வகுக்கப்பட வேண்டும். ஆந்திர மாநிலத்தில் உள்ளது போன்று "ஓய்வூதிய நிதியம்" தமிழகத்திலும் உருவாக்கப்பட வேண்டும். வாரியப்பணியாளர்களின் ஊதியம், ஓய்வூதியம், பணியிறுதி சலுகைகள், போன்றவற்றை வாரியம் கடன் பொறுப்பு (Liability) என்ற கணக்கில் கொண்டுவர வேண்டும். வாரிய சொத்துக்கள் சரியான முறையில் மறுமதிப்பீடு செய்யப்படவேண்டும். இதன் மூலம் ஓய்வூதியம் மற்றும் பணியிறுதி சலுகைகள் வாரியப்பணியாளர்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். **ஓய்வூதிய நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்று அனைத்து தொழிற் சங்கங்களும் கேட்டுக் கொண்டுள்ளபடி ஓய்வூதிய நிதியம் உருவாக்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்து முத்தரப்பு ஒப்பந்தத்தில் இடம் பெறச்செய்ய வேண்டும்.**

1100 தொழிற் நுட்ப உதவியாளர்கள் பணி நியமனம் செய்திட்ட தமிழக அரசுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி பாராட்டி 3.10.2009 அன்று சென்னையில் நடைபெற்ற **சங்கத்தின் மாநில மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் மாநாட்டு கோரிக்கைகளை ஏற்று அறிவித்த அனைத்து அறிவிப்புகளையும் வாரியம் மதித்து அவற்றை உடனே நிறைவேற்றிட அரசு வாரியத்திற்கு உத்திரவிடவேண்டும்.**

வாரிய மறுசீரமைப்பிற்கு பின்னர் மாறுதல் திட்டம் (Transfer Scheme) இறுதி செய்யப்படும் நிலையில் வாரியப்பணியாளர்களின் முன்னுரிமை பிரிக்கப்பட்ட கம்பெனிகளுக்கு மாற்றப்படுவதால் பணியாளர்களின் பதவி உயர்வுகள் பாதிப்புக்குள்ளாகும். இதனை தடுத்து நிறுத்திட **வாரியம் ஒப்புக்கொண்டபடி அனைத்து பணியாளர்களுக்கும் "காலவரைக்குட்பட்ட பதவி உயர்வு" (Time bound promotion) வழங்கப்பட வேண்டும்.**

பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்சமான போக்கினால் வேண்டுமென்றே பட்டயப் பொறியாளர்களின் பதவி உயர்வுகள் தாமதப்படுத்தப்படுகின்றன. வாரியத்திற்கு உண்மைக்கு மாறான தகவல்கள் அளித்து பொறியாளர் கழகத்திற்கு உறுதுணையாக செயல்படும் **பணியமைப்பு நிர்வாகப்பொறியாளர்களின் பாரபட்சமான நடவடிக்கைகளை விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுத்திடவும், வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படும் பட்டயப் பொறியாளர்களுக்கான அனைத்து பதவி உயர்வுகளையும் முழுமையாக உடனே வழங்கிடவும் வாரியமும், அரசும் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிட வேண்டும்.**

கட்டாயத்தின் பேரில், நியாயமற்ற முறையில் பணிஅனுமதிகள் Non work load பகுதிகளில் ரத்து (abolition) செய்தும், மறு அனுமதி (Redeployment) என்ற பெயரிலும் குறைக்கப்பட்டுள்ளதால் மின் உற்பத்தி நிலையங்களின் செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் மின் உற்பத்தி குறையும் அபாயமும் உள்ளது. மின்பற்றாக்குறை நிலவும் இக்காலகட்டத்தில் இவ்வாறு பணியனுமதி ரத்து, மறுஅனுமதி போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே **ரத்து செய்யப்பட்ட பதவிகளை மீண்டும் அனுமதித்திடவும், இனியும் பணியனுமதி ரத்து, பணியிடங்கள் குறைப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும், புதிதாக உருவாக்கப்படும் மின்திட்டங்களுக்கு இதுவரை இருந்தது போன்றே அனைத்து பணிகளுக்கும் வாரியப் பணியாளர்களையே அனுமதித்திடவும், ஒப்பந்த முறை மற்றும் தனியார் பங்கேற்பை முற்றிலும் தவிர்த்தும் பணியாளர் நலன் பாதுகாக்கப்படவேண்டும்.**

மேற்கூறியவைகளை 23.1.2011 அன்று பரிசீலித்த பொறியாளர் சங்கத்தின் மாநிலப் பொறுப்பாளர்கள் கூட்டம் வருகின்ற **4.2.2011 அன்று மாலை 5.10 மணியளவில் தமிழகம் முழுவதும் அனைத்து மின்திட்ட அலுவலகங்கள் முன்பாக நுழைவாயிற் கூட்டம்** நடத்தி மேற்கூறிய கோரிக்கைளை வாரியத்தின், தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிட முடிவெடுத்துள்ளது.

பொறியாளர் சங்கத்தின் உணர்வு மிக்க பொறியாளர்களே, நமது ஒன்றுபட்ட உணர்வுகளை வாரியத்தின், அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிடவும் அனைத்து பணியாளர்களின், பணிஓய்வு பெற்றவர்களின் நலன் காத்திடும் நியாயமான கோரிக்கைகளை தமிழக அரசு கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றிடவும் **4.2.2011 அன்றைய நுழைவாயிற் கூட்டத்தில் அலைகடலென திரண்டிடுவோம்.**

அணிதிரள்வோம் ! வெற்றி பெறுவோம்!!

வாழ்க பொறியாளர் சங்கம்!!!

இவண்

நாள் : 28.1.2011
இடம் : சென்னை

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**